I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.11 (L.W.23)
SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.V.K.Parthasarathi |
| Father Name | : | |
| Occupation | : | Additional S.P.(Rtd.), Vellore |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.01.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்:** 12.35 p.m

சாட்சி உடல்நிலை சரியில்லாதவர் என்பதாலும் அவர் பயணம் செய்ய இயலாததாலும், வேறு எந்த நீதிமன்றத்திற்கும் செல்ல இயலாத நிலையில் இருப்பதாலும், இரு தரப்பு வழக்கறிஞர் ஒப்புதலுடன் சாட்சி அவரது வீட்டிலிருந்து வீடியோவில் கணினி வழியில் நீதிமன்ற அலுவலர் திரு.கிருஷ்ணகுமார், இளநிலை உதவியாளர் என்பவர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை–**

நான் வேலூர் மாவட்டத்தில் Additional S.P.ஆக பணியில் இருந்து பணி ஓய்வு பெற்றேன். வழக்கு சமயத்தில் நான் D.S.P.,DCRB, Vellore ல் பணியில் இருந்தபோது குற்ற எண். 266/2006 பாகாயம் காவல் நிலையம், சட்ட பிரிவுகள் 307,332,294(b), 353, 506(ii) IPC r/w 34 IPC, 4(1)(aaa) of TN P Act and 25(1-B)(a) of Arms Act of 1959, PSO Orders No.150,151 of TN Police Standing Order படி வழக்கு பதிவு செய்திருந்ததை காவல் ஆய்வாளர் திரு.கோபால், பாகாயம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருந்ததை இந்த வழக்கு புகார்தாரர் திரு. சரவணன், காவல் துணை கண்காணிப்பாளர், வேலூர் அவர்கள் உள்ளதால் என்னுடைய மேல் அதிகாரியின் உத்தரவால் இந்த வழக்கை நான் DSP அந்தஸ்து இருந்ததால் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

21.03.2006 அன்று இரவு 09.00 மணிக்கு பாகாயம் காவல் நிலையம் சென்று அங்கு மற்றும் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் DSP சரவணன், தாவாத்தாரர் மற்றும் சாட்சிகள் சீனிவாசன், S.I..ஆயுதப்படை, அந்தோணிராஜா PCAR, சிவாஜி, குமார்(AR PC), சத்யநாராயணன், (PC), தனஞ்செழியன்(ARConstable), ராஜாமூர்த்தி( AR constable), ஜகந்நாதன்( AR constable), குகன்( AR constable), இளங்கோவன்( AR constable), புகழ்( உதவி காவல் ஆய்வாளர், வேலூர், ஹரிதாஸ், உதவி காவல் ஆய்வாளர், விரிஞ்சிபுரம், காசி தலைமை காவலர்(தனி பிரிவு), இவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சுரேஷ்பாபு(PCAR), ஜீவரத்தினம் (PCAR) அவர்களையும் விசாரித்தேன். தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு பாகாயம் காவல் நிலையம் சென்று குற்றவாளிகள் 2 வது எதிரி, 3 வது எதிரி மற்றும் 4 வது எதிரி ஆகியோர்களை இரவு 02.30 மணிக்கு கைது செய்து அவர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

எதிரி மணி என்பவர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அவரையும் கைது செய்து குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களை அழைத்து வந்து எதிரி மணியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

மறுநாள் 22.03.2006 அன்று காலை 06.00 மணிக்கு சிவநாதபுரம் கையிலாய திப்பையிடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் இவர்கள் முன்பாக பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையெழுத்து அதே இடத்தில் வைத்து வாங்கினேன். அவர்கள் என் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டார்கள். அந்த பார்வை மகசர் **அ.சா.,ஆ. 7** ஆகும்.

சம்பவ இடத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தேன். நான் வரைந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 8** ஆகும்.

22.03.2006 அன்று காலை 07.00 மணிக்கு மகசரில் அதே சாட்சிகள்

முன்னிலையில் கத்தி, ரத்தம் தோய்ந்த மண்,ரத்தம் தோயாத மண், மாதிரி மண், 3 கற்கள் ஆகியவற்றை மகசர் மூலம் கைப்பற்றினேன். அதில் சாட்சிகளிடம் கையெழுத்து வாங்கினேன். என் முன்னர் தான் சாட்சிகள் சம்பவ இடத்தில் கையெழுத்து போட்டார்கள். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 9** ஆகும். அந்த வழக்கு சொத்துகள் ஏற்கனவே சா.பொ. 9 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றிய சொத்துக்களை பார்ம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ. 10** ஆகும்.

21.03.2006 அன்று இரவு 20.30 மணிக்கு பாகாயம் காவல் நிலையத்தில் வைத்து சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் முன்னிலையில் மகசரில் எதிரிகள் நடுபையன், மணி, சடையன் மற்றும் முனிரத்தினம் ஆகியோர்களிடமிருந்து சுமார் 50 லிட்டர் புடிக்க கூடிய 2 லாரி டியுப்களில் தலா 50 லிட்டர் வீதம் 100 லிட்டர் நாட்டு சாராயம் கைப்பற்றி அதில் சுமார் 150 மில்லி சாராயம் 2 பாட்டில்களில் மாதிரிக்கு எடுத்து சீல் வைக்கப்பட்டது. மீதி சாராயத்தை காவல் நிலையம் முன்பு கொட்டி அழிக்கப்பட்டது. பின்பு அந்த மகசரில் சாட்சிகளிடம் என் முன்னிலையில் கையெழுத்து பெறப்பட்டது. அந்த மகசரில் உள்ள கையெழுத்துக்கள் சாட்சிகளுடையதுதான். அந்த மகசர் **அ.சா.ஆ. 11** ஆகும்.

மாதிரிக்கு எடுக்கப்பட்ட தலா 350 மில்லிலிட்டர் நாட்டு சாராயம், 2 வெள்ளை நிற பாட்டில்கள் படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிகொள்ளப்பட்டது. அந்த படிவம் 95 **அ.சா.ஆ. 12** ஆகும்.

மகசர் சாட்சிகளான ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

படிவம் 95 மூலமாக நீதிமன்றத்திற்கு பொருள்களை அனுப்பி ரசாயண பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். நாட்டு துப்பாக்கி –2, DSP பயன்படுத்திய Revolver–1, Empty cartridges(காலி தோட்டா) ஆகியவற்றை சென்னை தடய

அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்தேன். சாராய மாதிரியையும் தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்தேன். RDO, வேலூர் முன்னிலையில் நாட்டு துப்பாக்கி– 2 ஆகியவற்றை fire செய்து empty ballet ஆக காலி செய்யப்பட்டு அதை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும் அதை தடய அறிவியல் துறைக்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். Ballistic Expert Opinion– Ballistic Report க்காக அனுப்பி வைத்தேன்.

எனக்கு பணி உயர்வு வந்ததால் நான் பணி மாறுதல் பெற்று தஞ்சாவூருக்கு சென்று விட்டேன்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம்: 01.10 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.01.29 18:38:42 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்